பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 04 ஞாயிற்றுக்கிழமை 16.02.2025 | அதிர்வு 200

உயர்நீதிமன்ற வழக்கையடுத்து

## பல்கலை மாணவனின் வகுப்புத் தடை நீக்கம்

யாழ்ப்பாணம்பல்கலைக்கழகதுணை வேந்தரால் யாழ். பல்கலைக்கழக 4ஆம் வருட சட்டத்துறை மாணவன் சி.சிவகஜனுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த வகுப்புத் தடை உத்தரவு 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழரசின் செயலாளர் சுமந்திரன்!

## இன்றைய மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய பதில் பொதுச்செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இன்று நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் இன்று நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதுவரை அப்ப பதவியில் இருந்த மருத்துவர் ப.சத்தியலிங்கம் எம்.பி. சுகவீனம் காரணமாக பதவியில் தான் தொடர்ந்து இருக்க முடியாது என இன்றைய கூட்டத்தில் அறிவித்தமையை அடுத்து கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சத்தியலிங்கத்துக்கு அடுத்துக் கட்சியில் சிரஷ்ட துணைச் செயலாளராக இருந்த சுமந்திரனைப் பதில் பொதுச் செயலாளராக நியமிப்பது என மத்திய குழு இன்று உடனடியாகவே தீர்மானித்தது. 02



# பட்ஜட் ரெடி – நாளை நாடாளுமன்றில் இறுதி வரைவைப் பார்வையிட்ட அநுர

2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இறுதி வரைவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் பார்வையிட்டார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும் இந்தச் சந்தர்ப்பத்தில் இணைந்து கொண்டார்.

வரவு – செலவுத் திட்டம், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நாளை முற்பகல் 10.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, பாதீடு உரை இடம்பெறவுள்ளது.

# விளையாட்டுத்துறை அமைச்சர் யாழ். மாவட்டத்துக்கு வருகை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தந்த இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கைப் பார்வையிட்டார்.

இதன்போது துரையப்பா விளையாட்டு அரங்கின் தேவைப்பாடுகள் தொடர்பாக அவர் ஆராய்ந்தார்.

ஒளியமைப்பு வசதிகள், பராமரிப்பு வசதிகள் மற்றும் உள்ளக அரங்கு அமைப்பு தொடர்பாக அவர் ஆராய்ந்ததுடன் அவற்றுக்கான திட்ட முன்



மொழிவு பொறிமுறை ஒன்றை உருவாக்கித் தருமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சரின் பயணத்தின்போது வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிலம் தொடர்பாகவும், அதனுடைய தற்போதைய நிலைமை தொடர்பாகவும் அமைச்சர் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வுகளில் யாழ். மாவட்டபதில் அரச அதிபர் ம.பிரதீபன், வேலணைப் பிரதேச செயலாளர் க.சிவகரன் மற்றும் யாழ். மாநகர சபையின் பொறியியலாளர் சுரேஷ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இந்தியப் பிரதமர் மார்ச் 3 இல் இராமேஸ்வரத்துக்கு வருகை

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி இராமேஸ்வரத்துக்கு வருகை தரவுள்ளார்.

இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் பகுதிக்கே பிரதமர் மோடி வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாம்பனில் அமைக்கப்பட்ட 1.7 கிலோமீற்றர் நீளமான பாலத்தைத் திறந்து வைப்பதற்கே பாரதப் பிரதமர் வருகை தரவுள்ளார்.

இந்தத் திறப்பு விழாவின்போது இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கான படகு சேவை ஆரம்பிக்கும் நோக்கில் இராமேஸ்வரத்தில் அமைக்கப்படவுள்ள இறங்குதுறை தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பல்கலை மாணவனின்...**

மீளப் பெறப்பட்டுள்ளது.

தனக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடை சட்ட நியமனங்களுக்கு அப்பாற்பட்டது என்று குறிப்பிட்டு அந்த மாணவனின் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே நேற்று அவருக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடை மீளப்பெறப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மாணவனுக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடையை 'தவறானது' என்று அறிவிக்கக் கோரியும், இழப்பீடு உள்ளிட்ட நிவாரணங்களைக் கோரியும் குறித்த வழக்கு தொடரும் என்று மாணவன் சி.சிவகஜனின் தரப்புச் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் தெரிவித்துள்ளார்.

**தமிழரசின்...**

அந்த முடிவுக்கு கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் சிறீதரன் எம்.பி., ஸ்ரீநேசன் எம்.பி. மற்றும் முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் ஆகியோர் தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். எனினும், அவர்களின் எதிர்ப்பை மீறி அந்த நியமனத்தை மத்திய குழு மேற்கொண்டது.

வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான தந்திரோபாயம் குறித்து இன்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. தேர்தலை தனியாகத் தமிழரசுக் கட்சியாக எதிர்கொண்டாலும், மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் தேர்தலுக்கு முன்னரே இணக்க உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவையொட்டிய வேளையில் கட்சிக்கு எதிராக – கட்சியின் பிரமுகர்களுக்கு எதிராக – முன்னெடுக்கப்பட்ட வன்முறை பாங்கிலான அச்சுறுத்தல் நடவடிக்கைகள் குறித்து யாழ்ப்பாணத்தில் செய்யப்பட்டுள்ள பொலிஸ் முறைப்பாடு தொடர்பில் காத்திரமான முன்நகர்வுகள் இல்லாவிட்டால், அந்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களில் முக்கிய பிரமுகர்கள் இருப்பதையும் கவனத்தில் கொண்டு, அந்த விடயத்தை குற்ற புலனாய்வுப் பிரிவினர் மூலம் துரிதமாக முன்னெடுத்து, புலனாய்வு செய்து விசாரிப்பதற்கான அழுத்தத்தை – நடவடிக்கைகளை – கொழும்பில் கட்சி ரீதியாக மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது.





# புதிய மதுபானசாலைக்கு எதிரான போராட்டம் பெரிய நீலாவணையில்!

## வலுப்பெறும் போராட்டம்; எம்பிக்கள் களத்தில்

(வி.ரி. சகாதேவராஜா)

இரண்டு தடவைகள் பொது மக்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும் மீறி மீண்டும் பெரிய நீலாவணையில் மதுபானசாலை கடந்த (11) செவ்வாய்க் கிழமை திறந்து வைக்கப்பட்டது. இதை அடுத்துத் தொடர் போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகிறது.

பொது மக்கள் மூன்றாவது முறை உயாகவும் ஆர்ப்பாட்டத்தை கொளுத்தும் வெயிலில் இன்று (16) ஞாயிற்றுக் கிழமையும் முன்னெடுத்துள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை சவப் பெட்டி சகிதம் ஏராளமான பொது மக்கள் குறித்த மதுபானசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பெரிய நீலாவணையில் உள்ள இரண்டு மதுபான சாலைகளையும் மூட வேண்டும் என்ற கோரிக்கையும் மக்களால் எழுப்பப்பட்டது.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.சாணக்கியன், க.கோடீஸ்வரன் ஆகியோர் இந்த இடத்துக்கு இன்றுவருகைதந்திருந்தனர்.

இதன்போது மக்கள் ஆக்ரோசமாகக் கேள்விகளைத் தொடுத்தனர். இங்கு அரசியல் செய்ய வேண்டாம். மதுபானசாலை அனுமதி பெற்றவர்கள் வேண்டாம் என்றெல்லாம் கோஷம் எழுப்பினர்.

இறுதியில், மகஜரைத் தாருங்கள். பெரியநீலாவணையில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலைக்கு எதிராக நீதிமன்றின் ஊடாக தடையுத்தரவு பெற்று நடவடிக்கையெடுக்கப்படும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் அங்கு சென்றிருந்தார். அவரிடமும் மக்கள் கேள்வி எழுப்பினர்.

அவர் பதில் அளிக்கையில்,

இதுவரை மக்கள் தந்த அனைத்து கடிதங்களும் கோரிக்கைகளும் உரிய இடங்களுக்கு அனுப்பி இருக்கின்றோம். நாங்கள் இந்த மதுபான சாலை தொடர்பாக எந்த சிபாரிசையும் செய்யவில்லை. விரும்பினால் நீங்கள் அலுவலகம் வந்து அந்த ஆவணங்களை பார்க்கலாம்.

அரசின் கொள்கையாக இந்த புதிய மதுபானசாலைகள் திறக்கப்படுகின்றன. இது அனைவருக்கும் தெரியும்.

எனினும் மக்கள் சார்பான விடயங்களை நாங்கள் கவனிப்போம். மக்களுக்கு விருப்பம் இல்லாத விடயங்களை நாங்கள் ஒருபோதும் முன்னெடுக்க மாட்டோம். அதில் ஒரு கட்டமாகத்தான் நாம் இதனைத் தற்காலிகமாக மூடி இருந்தோம் .

இருந்தும் சட்டரீதியாக நடவடிக்கைகளுக்கு உட்பட்டு அது மீண்டும் கடந்த 11 ஆம் திகதி திறக்கப்பட்டது. நான் இதனை உடனடியாக மூடுவேன் என்று உறுதி அளிக்க முடியாது . ஏனென்றால் இது எனது கட்டுப்பாட்டில் இல்லை. மக்கள் கோரிக்கையை நிறைவேற்ற நாங்கள் தொடர்ந்து மக்களோடு பயணிப்போம். இந்த மதுபானசாலைக்கான அனுமதி பத்திரம் வலுவில் உள்ளது. அவர்கள் தொடர்ந்து பணம் கட்டியிருக்கின்றார்கள்.– என்றார்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அநுரவின் பட்ஜெட் நாளை

சுதந்திர இலங்கையில் 79 ஆவது வரவு - செலவுத் திட்டத்தை நாளை காலை 10:30 மணிக்கு நாட்டின் நிதி அமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறார்.

நாட்டின் முதலாவது நிதி அமைச்சர் என்ற முறையில் 1947 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனா முதலாவது வரவு - செலவுத்திட்டத்தைசமர்ப்பித்திருந்தார். அந்த வரிசையில் நாளை அதனை சமர்ப்பிக்கும் நாட்டின் 40 ஆவது நிதி அமைச்சர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆவார்.

தன்னுடைய சொந்த - சுயாதீன - இயல்பான - தாயாரிப்பான வரவு - செலவுத் திட்டம் இது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அறிவித்தாலும், அது, இலங்கையைப் பொருளாதார நெருக்கடியின் போது பிணையெடுக்க வந்த சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு விதித்த கொள்கைகள் தொடர்பான எல்லை வரையறைகளுக்குள் அமைந்த வரவு - செலவுத் திட்டமாகத்தான் இருக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு, அரச சேவைகளுக்கு ஆள் சேர்ப்பு ஆகியவை பற்றி ஆளும் தரப்பு அதிகம் பீற்றிக் கொண்டிருந்தாலும், இவ்விடயத்தில் சர்வதேச நாணய நிதியம் விதித்த எல்லைகளுக்குள்ளே நின்றுதான் மேற்படி சம்பள அதிகரிப்பு மற்றும் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளை நிதி அமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் மேற்கொள்ள முடியும் என அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

பொதுமக்களின் உழைப்பின் மீது - தேட்டத்தின் மீது - விதிக்கப்படும் வரி மீளாய்வு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றன.

புதிதாக பெரிய அளவில் வரிவிதிப்பு இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்படாவிட்டாலும் பொருளாதார முயற்சிக்காக ஏற்கனவே விதிக்கப்பட்ட வரிகள் தொடர்ந்து பேணப்படும் என்றே தெரிகின்றது.

வரவு - செலவுத் திட்டத்தில் புதிதாக முன்வைக்கப்படும் யோசனைகள் குறித்து, அவற்றின் அடிப்படைகள் குறித்து, ஏற்கனவே அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களை நடத்தி, கருத்துக்களைப் பரிமாறி, இந்த யோசனை திட்டங்களுக்கு நாணய நிதியத்தின் பச்சைக் கொடி அனுமதியை பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாட்டின் பொருளாதார முயற்சிக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கும் அடுத்த கடன் தவணைக் கொடுப்பனவு 33 கோடி டொலர் வரவுள்ளது. புதிய வரவு - செலவுத் திட்டம் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்து கொண்ட இணக்கப்பாட்டிற்கு அமைவாக இருப்பது அடுத்த கட்ட இந்தத் தவணைக் கொடுப்பவை வழங்குவதற்கு முக்கியமானது என்பதை நாணய நிதியம் ஏற்கனவே இலங்கைத் தலைவர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்துள்ளது. அந்தப் பின்புலத்தில் நாணய நிதியத்துக்கு இசைவாண யோசனை திட்டங்களை ஜனாதிபதி நாளைய வரவு - செலவுத் திட்ட அறிவிப்பில் வெளியிடுவார் என உரிய வட்டாரங்கள் உறுதிப்படுத்தன.

நாளை வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதும், அது அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். இரண்டாம், மூன்றாம் வாசிப்பு அன்று இடம் பெறும். தொடர்ந்து மார்ச் 21-ஆம் திகதி வரை வரவு - செலவு திட்டம் மீதான குழு நிலை விவாதம் நீடிக்கும்.

இது மக்கள் விரும்பும் வரவு - செலவு திட்டம் என்று அதிகார மட்டத்தில் கூறப்பட்டாலும், நாளை அது வெளியான பின்னரே அது மக்கள் ஆதரவு வரவு - செலவுத் திட்டமா அல்லது மக்களை வதக்கிப் பிழியும் வரவு - செலவுத் திட்டமா என்பதை நாம் காண முடியும்.



# மனித நேய செயற்பாட்டாளரை வாழும்போதே வாழ்த்துவோம்!

## யாழ். பல்கலையில் கௌரவிப்பு நிகழ்வு

மக்களின் எழுச்சிக்காக சமூக மட்டத்தில் சேவையாற்றும் மனித நேய செயற்பாட்டாளர்களை வாழும்போதே வாழ்த்துவோம் பசுமையை நேசிப்போம் என்னும் தொனிப் பொருளில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றுள்ளது.

இன்ரநஷினல் ஹியூமன் ரைற்ஸ் குளோபல் மிஷன் என்னும் மனித உரிமைகள் செயற்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வாழும்போதே வாழ்த்துவோம் பசுமையை நேசிப்போம் என்னும் கௌரவிப்பு நிகழ்வில் ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்கள், இளம் சமூக செயற்பாட்டாளர்கள், மூத்த சமூக செயற்பாட்டாளர்கள் என வகைப்படுத்தப்பட்டு குறித்த கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது.

ஏ.ஆர்.அமீர்கான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேரசிரியர் வே.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார்.

இதன் போது ஊடகவியலாளர் முருகப்பெருமான் மதிவாணனுக்கு ஊடகப் பணியூடாக சமூகசேவையில் அர்பணிப்பணிப்புடன் சேவையாற்றியமைக்கான உயரிய விருது வழங்கப்பட்டது.



# தீயில் எரிந்த உதவி பிரதேச செயலர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்!



சாவகச்சரி பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக பணி புரிந்து வந்த பெண் கடந்த வெள்ளிக்கிழமை கடும் தீ காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## நீர்வேலிப் பகுதியில் துயரம்

ஆறு மாதகர்ப்பிணியாக இருந்த உதவி பிரதேச செயலாளரான பெண் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் ஆறுமாதக் கர்ப்பிணியாக இருந்த நிலையில், ஆறு மாத சிசுவை உயிருடன் மீட்கும் பணி இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இன்றைய தினம் இருவரும் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுக்கை அறையில் மெழுகுதிரி எரிந்து ஏற்பட்ட தீ விபத்தே இதற்குக் காரணம் என்று அவர் முன்னரே தனது வைத்தியசாலை முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் நீர்வேலி பகுதியைச் சேர்ந்த தமிழினி சதீஸ் (வயது 35) என்ற உதவி பிரதேச செயலாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு ஏற்கெனவே ஆறு வயதில் பெண் குழந்தை ஒன்றும் உள்ளது. கணவர் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் கிராம சேவையாளராகப் பணி புரிந்து வருகின்றார்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.



# முன்பள்ளி ஆசிரியர்கள் ரவிகரன் எம்.பியுடன் சந்திப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – முன்பள்ளி ஆசிரியர்களின் நிர்வாகத்தினருக்கும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு – கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்ந்து குறைந்த ஊதியத்துடன் சேவையாற்றுகின்றமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் முன்பள்ளி ஆசிரியர்களின் நிர்வாகத்தினர் இதன்போது கோரிக்கையும் முன்வைத்தனர். அத்தோடு நீண்ட காலமாக பல இன்னல்களுக்கு மத்தியில் குறைந்த ஊதியத்துடன் பணியாற்றிவரும் குறித்த முன்பள்ளி ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பிலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் முன்பள்ளி ஆசிரியர்களின் நிர்வாகத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் தாம் கவனம் செலுத்துவார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.









# பிளாஸ்டிக், பொலித்தீன் அற்ற சூழலை உருவாக்கும் விழிப்புணர்வு நிகழ்வு!

(எச் எம் ஹலால்தீன் )

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் கிண்ணியா நகர சபையின் ஏற்பாட்டில் பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் அற்ற சுற்றுப்புற சூழலை உருவாக்கும் நோக்குடன் விழிப்புணர்வூட்டல் நிகழ்வு றகுமானியா நகர் கிராம சேவகர் பிரிவில் இடம் பெற்றது.

நகர சபையின் செயலாளர் எம். கே.எம்.அனீஸ் தலைமையிலான குழுவினர் இதனை முன்னெடுத்தனர்.

கிண்ணியா நகர சபை பிரிவில் உக்காத பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் கழிவுப் பொருளை அகற்றித் தூய்மையான சுழலை ஏற்படுத்துவதே இந்த விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும் என்று நகரசபை தெரிவித்துள்ளது.



ஒவ்வொரு வீடாகச் சென்று திண்மக் கழிவகற்றுவதற்கான 150 பைகளும், துண்டுப் பிரசுரங்களும் அறிவுறுத்தல்களும் பொது மக்களுக்கு இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிண்ணியா நகர சபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள், கிண்ணியா மக்கள் பேரவை நிறைவேற்றுச் செயலாளர் எம்.எம். அப்துல் ஜவாத், சமூக மேம்பாட்டு அமைப்பின் தலைவர் ஏ.யூ.அலாப்தீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# ஐக்கிய மக்கள் சக்தியின் திருமலை மாவட்ட தலைவராக இம்ரான் எம்.பி.

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஐக்கிய மக்கள் சக்தியின் மூதூர் தொகுதி அமைப்பாளராகவும் திருகோணமலை மாவட்டத் தலைவராகவும் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

## Family day SUPER DEAL

**14,15,16,17/02/2025**

SPECIAL DEAL 900g Kings Curry Powder 14.99

Mega deal 100$ க்கு மேல் கொள்வனவு செய்து 4lb மைசூர் பருப்பு packet ஒன்றையை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.




1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998



# மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் தொடர்பான அடிப்படைக் கற்கை நெறி!

(சம்மாந்துறை
தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் தொடர்பான அடிப்படைக் கற்கை நெறி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு மேலங்கி வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி பயிற்சி நெறி தொடர்பான தெளிவுட்டலை அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் வழங்கினார்.

இந்த நிகழவுக்கு, அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம, சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல். ஹனீபா, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ், கல்முனை சுகாதார அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் டாக்டர் அஜ்வத், காரைதீவு, சம்மாந்துறை பிரதேச சபைகளது செயலாளர்கள், இராணுவம் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் செயலாளருமான ஐ.எல். எம். முஸ்தபா என பலரும் கலந்து கொண்டனர்.















# பற்றிமாவில் மூன்று நாள்கள் சாரணர் முகாம்!

(வி.ரி. சகாதேவராஜா )

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் நிகழ்வுகளில் ஒன்றாக மூன்று நாள்கள் சாரணர் முகாம் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வுகள் அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றன.







# முள்ளியவளை கமநல சேவை நிலைய குறைகளைக் கேட்டறிந்த ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - முள்ளியவளை கமநல சேவை நிலைய பிரிவுக்கு உட்பட்ட கமக்கார அமைப்பு பிரதிநிதிகளுக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கும் இடையில் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் குறைகேள் சந்திப்பில் முள்ளியவளை கமநல சேவை நிலையப் பிரிவுக்கு உட்பட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குறைபாடுகள் தொடர்பில் கமக்கார அமைப்பு பிரதிநிகளிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு மாலை அணிவிக்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி விவசாயிகளால் மதிப்பளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் மிக முக்கியமாக, கணுக்கேணிக் குளத்தின் சுமார் 3 மைல் தூரமான நீர்ப்பாசன வாய்க்கால் சீரின்மையால் விவசாயிகள் எதிர்நோக்கு பிரச்சினைகள் தொடர்பிலும், குறித்த நீர்ப்பாசன வாய்க்காலை அமைத்துத்தருமாறும் விவசாயிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்தோடு வட்டுவாகல் பகுதியில் உள்ள மிகப் பிரதானமான மூன்று விவசாய வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளமையால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இதன்போது தெரிவிக்கப்பட்டது. குறித்த விவசாய வீதிகளைச் சீரமைத்துத் தருமாறும் கமக்கார அமைப்பு பிரதிநிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதேவேளை கொண்டமடு விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதி, முள்ளியவளை மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நெல் உலரவிடும் தளத்துக்குச் செல்லும் வீதியைச் சீரமைப்பது தொடர்பிலும், மதவளசிங்கன் குளத்தின் கீழான வயல் நிலங்களுக்கு யானை வேலி அமைப்பது தொடர்பிலும் இதன்போது கமக்கார அமைப்புப் பிரதிநிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த கமக்கார அமைப்பு பிரதிநிதிகள் அனைவராலும் பொதுவாக யானை, குரங்குகளால் ஏற்படும் பாதிப்பு, விவசாய வீதிப் பாதிப்புகள், மேச்சல் தரவைப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இந்த நிலையில் விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட குறைபாடுகள், கோரிக்கைகள் தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினரால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் முள்ளியவளை கமநலசேவைநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் பேரம்பலம் தயாரூபனும் பங்கேற்றிருந்தார்.



# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு!

(அபு அலா)

"வளமான பெற்றோர்களிடம் இருந்து ஆற்றலுள்ள பிள்ளைகளை உருவாக்குதல்" எனும் தொனிப்பொருளில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், அவர்களின் கணவன்மார்களுக்குமான ஒரு நாள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு அட்டாளைச்சேனை யாடே மண்டபத்தில் நேற்று (15) இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் தொற்று நோயியல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் பசால், ஒலுவில் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தார் ஏ.எல்.



அலாவுடீன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு, கர்ப்பகால ஊட்டச்சத்து சமநிலை முக்கியத்துவம் அவர்களின் கிளினிக் வருகை, கணவனின் பங்களிப்பு மற்றும் குழந்தை பிறந்த பின்னர் தடுப்பூசி ஏற்றுதல் தொடர்பான அறிவுரைகளை வழங்கி வைத்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி சஹிலா இஸ்ஸடீனின் அறிவுரைக்கமைய இடம்பெற்ற இந்த ஒருநாள் கருத்தரங்கில் 200 இற்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களும் அவர்களின் கணவன்மாரும் கலந்து கொண்டனர்.





# சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடு செய்ய 'கியூ.ஆர்.' முறை!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாட்டை பதிவு செய்ய 'கியூ.ஆர்.' முறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன் வழிகாட்டுதலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

முறைப்பாடுகளை 'கியூ.ஆர்.' முறையில் தெரியப்படுத்தும் நிகழ்வு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த முறைப்பாடு கிடைக்கப்பெற்று ஏழு வேலை நாள்களுக்குள் விசாரணைகள் துரிதமாக நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், சமூக வைத்திய நிபுணர் டாக்டர் எம்.ஐ.எம். ஹில்மி, மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.என்.எம். பைலான், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்மற்றும் உத்தியோகத்தர்கள்என பலரும்கலந்து கொண்டனர்.

# கற்பிட்டியில் வாழ்க்கை மாற்றத்துக்கான உளவளதுணை இலவச பயிற்சி பட்டறை

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டியில் முதன் முறையாக வாழ்க்கை மாற்றத்துக்கான ஒரு நாள் உளவள ஆலோசனை இலவச பயிற்சிப் பட்டறை கற்பிட்டி செடோ நெனசலவின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை (18) காலை 09 மணி தொடக்கம் கற்பிட்டி பிரதேச செயலகத் தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உளவியல் என்பதன் முக்கியத்துவம், வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் தனிநபர் மற்றும் குடும்ப ஆலோச னைகள், குழந்தைகள் மற்றும் சமூக உளவியல் சேவைகள் என்பன தொடர்பில் இதன்போது கருத்துரைகள் வழங்கப் படவுள்ளன.

பயிற்சி பட்டறையில் தெளிவூட்டல்களை கற்பிட்டி பிரதேச செயலக சமூக வலுவூட்டல் அமைச்சின் புத்தளம் மாவட்ட உளவளதுணை அமைப்பாளர் எச் .எம் நிப்ராஸ் வழங்கவுள்ளார் என்று சடோ நெனசலவின் உளவளத்துணை பயிற்சி இணைப்பாளர் எம்.ஆர்.எப் சிப்கா தெரிவித்துள்ளார்.





# ‘பிடியளவு கமநிலத்துக்கு’ என்னும் திட்டம் முத்து நகர் பகுதியில் ஆரம்பித்து வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட உப்பு வெளி கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்துக்குட்பட்ட முத்து நகர் பகுதியில் “பிடியளவு கமநிலத்துக்கு” எனும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் வினைத்திறன் மிக்க விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் அரசின் தேசிய வேலை திட்டத்தின் ஒரு பகுதியாக இஇந்தத் திட்டம் முத்து நகர் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உப்பு வெளி கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் டீ.தர்சாநந்தன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வை உப்புவெளி கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் முத்து நகர் பகுதியில் உள்ள முத்து நகர் விவசாய சம்மேளனம், தகரவெட்டுவான் விவசாய சம்மேளனம், மத்திய வெளி விவசாய சம்மேளனம், அம்மன் குள விவசாய ஆகிய நான்கு விவசாய சம்மேளனங்கள் ஒருங்கிணைத்திருந்தன.

பயிரிடப்படாத வயல் நிலங்கள், மேட்டு நிலங்கள் போன்றவற்றை விவசாய செய்கையில் ஈடுபடுத்துவதற்கான ஒரு ஊக்குவிப்புத் திட்டமாக இது காணப்படுகிறது.

இந்தத் திட்டம் மூலம் உணவால் பாதுகாக்கப்பட்டதொரு தேசத்தை உருவாக்கும் பொருட்டும் சகல கமக்காரர்கள், சொந்த காணி உரிமையாளர்கள், இருப்பாட்சியாளர்கள் ஆகியோர்கள் இதன் மூலம் பயனடைவதுடன் தேசத்தின் பசியை போக்குவதற்கும் நாளைய நாளில் செழிப்பான விலைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கும் இது உறுதுணையாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது விவசாயிகளுக்குக் குறித்த சட்ட திட்டங்கள் அடங்கிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க அனுமதி கடிதங்களும் வழங்கப்பட்டன.

உணவால் பாதுகாக்கப்பட்டதொரு தேசத்தை உருவாக்கும் பொருட்டு உறங்கும் கமத்தொழில் நிலங்களை விழிப்புறச் செய்யும் தேசிய செயற்பாடாக இது காணப்படுகிறது.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் சட்டம் மற்றும் சேவை கிளைக்கு உரிய உத்தியோகத்தர் கே.நேமிநாதன் உட்பட விவசாய போதனாசிரியர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள்என பலரும்கலந்து கொண்டனர்.





# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ‘கிளீன் ஸ்ரீ லங்கா’ திட்டம் மன்னாரில்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டம் நேற்று சனிக்கிழமை (15) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக மன னாரில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.பூலோகராஜா தலைமையில் மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள வயோதிபர் இல்லத்தில் இது இடம்பெற்றது.

இதன் போது மத தலைவர்கள், இளைஞர், யுவதிகள், கிராம மக்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதிநிதிகள் இணைந்து வயோதிபர் இல்ல வளாகத்தில் சிரமதானப் பணியை முன்னெடுத்தனர்.



# மூத்த உழைப்பாளர்கள் கௌரவிப்பு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஏர் நிலம் தொண்டர் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழர் திருநாளாம் தைத் திருநாள் பொங்கல் விழா நிகழ்வும் மற்றும் மூத்த உழைப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று சனிக் கிழமை (15) காலை அடம்பன் மாளி கைத்திடல் மாணிக்க பிள்ளையார் கோவில் வளாகத்தில் நடத்தப்பட் டன.

வருடா வருடம் இடம்பெறும் இந்த நிகழ்வு இவ்வருடம் "நம்பி கை கொடுப்போம், நம்பிக்கை கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மூத்த உழைப்பாளர்களை கௌரவிக்கும் முகமாகவும் இது ஒழுங்கு செய்யப்பட்டது.

மன்னார் மாவட்ட ஏர் நில அமைப் பின் இணைப்பாளர் கவிஞர் பெனில் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் டிலைக்ஸன், மாளி கைத் திடல் கிராம உத்தியோகஸ்தர் லீனற் அருள் மதி சந்தியாகு, கமநல அபிவிருத்தி உத்தியோகஸ்தர் பிரியந் தன் உட்பட ஏர் நில அமைப்பின் நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்ட னர்.

மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப் பட்ட 27 மூத்த உழைப்பாளர்கள் பொன் னாடை போர்த்தி மாலை அணிவிக்கப் பட்டு நினைவு சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.









# புதுடில்லி ரயில் நிலைய சனநெரிசலில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் விசாரணை

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் உள்ள ரயில் நிலையமொன்றில் நேற்று ஏற்பட்ட சனநெரிசலில் சிக்குண்டு 3 சிறுவர்கள் உள்ளடங்களாக 18 பேர் உயிரிழந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரயாக்ராஜ் பகுதியில் நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்வில் பங்கேற்பதற்காக ரயிலில் ஏறுவதற்கு முயற்சித்த பயணிகளே இவ்வாறு உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





ரயில் நிலையத்தில் ஏற்பட்ட பெரும் நெரிசல் காரணமாக, மூச்சுத் திணறலால் பல பயணிகள் மயக்கமடைந்தனர் என சம்பவத்தை நேரில் அவதானித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக உயர் மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இந்தியத் ரயில்வே துறை அமைச்சு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

# மும்பை 11 மாடி கட்டடத்தில் தீ; பெண்ணொருவர் உயிரிழப்பு

மும்பையின் அமைந்துள்ள 11 மாடி கட்டடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஏற்பட்ட தீ விபத்தில் 42 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த அனர்த்தத்தில் மேலும், மூன்று பேர் மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தெற்கு மும்பையில் உள்ள மஸ்ஜித் பந்தர் பகுதியில் அமைந்துள்ள பன்னா அலி மேன்ஷன் கட்டிடத்திலேயே இன்று காலை 6.11 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

புகையால் பல குடியிருப்புவாசிகள் காயம் மற்றும் மூச்சுத்திணறல் அடைந்தனர்.



முதல் மாடியில் இருந்த இரண்டு பெண்களுக்கு கை, கால்களில் காயம் ஏற்பட்டு புகையை சுவாசித்ததால் அவதிப்பட்டனர்.

அவர்கள் பொலிஸ் அவரச வாகனத்தில் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

புகையால் பாதிக்கப்பட்ட ஆறாவது மாடியில் வசிக்கும் ஒரு ஆண், தனியார் வாகனத்தில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

எட்டாவது மாடியில் இருந்த ஒரு பெண்ணும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தீயணைப்பு படையினரின் விரைவான நடவடிக்கையினால் காலை 06.31 மணியளவில் தீ வெற்றிகரமாக அணைக்கப்பட்டது.

தீ விபத்துக்கான காரணத்தை கண்டறிய அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# மேலும் 116 இந்தியர்களை நாடு கடத்திய அமெரிக்கா

சட்டவிரோதமாக குடியேறிய 116 இந்தியர்களை ஏற்றிச் சென்ற மற்றொரு அமெரிக்க இராணுவ விமானம் பஞ்சாபின் அமிர்தசரஸில் நேற்று சனிக்கிழமை இரவு தரையிறங்கியது.

சட்டவிரோத குடியேற்றத்திற்கு எதிரான நடவடிக்கையின் ஒரு பகுதியாக டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தால் நாடு கடத்தப்பட்ட இந்தியர்களின் இரண்டாவது தொகுதி இதுவாகும்.

சி-17 விமானம் அமிர்தசரஸில் இரவு 11.35 மணியளவில் எதிர்பார்த்த நேரத்திற்கு 90 நிமிடங்கள் தாமதமாக தரையிறங்கியது என்று ஆதாரங்களை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

குடியேற்றம், சரிபார்ப்பு மற்றும் பின்னணி சரிபார்ப்பு உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகளுக்கு பின்னர், நாடு கடத்தப்பட்ட புலம்பெயர்ந்தோர் தங்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

116 நாடுகடத்தப்பட்டவர்களின் பட்டியலின்படி, அவர்களில் 60 க்கும் மேற்பட்டவர்கள் பஞ்சாபை சேர்ந்தவர்கள் மற்றும் 30 இற்கும் மேற்பட்டவர்கள் ஹரியானாவைச் சேர்ந்தவர்கள்.

ஏனையவர்கள் குஜராத், உத்தரபிரதேசம், கோவா,



மகாராஷ்டிரா, ராஜஸ்தான், இமாச்சல பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

நாடு கடத்தப்பட்ட 157 இந்தியர்களுடன் மூன்றாவது விமானம் இன்று ஞாயிற்றுக்கிழமை அமிர்தசரஸில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவில் வசிக்கும் மேலும் 487 சட்டவிரோத இந்திய குடியேற்றவாசிகளை அமெரிக்க அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர் என மத்திய அரசு அறிவித்த ஒரு நாள் கழித்து இந்த நாடு கடத்தல் வந்துள்ளது.

பெப்ரவரி 5 ஆம் திகதி, 104 சட்டவிரோத இந்தியக் குடியேற்றங்களுடன் அமெரிக்க விமானம் அமிர்தசரஸில் தரையிறங்கியது.



# அமெரிக்கா, ரஷ்யா அதிகாரிகள் சவூதி அரேபியாவில் சந்திப்பு

உக்ரைன் - மொஸ்கோவுக்கு இடையிலான சுமார் மூன்றாண்டு காலப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க அமெரிக்க மற்றும் ரஷ்ய அதிகாரிகள் எதிர்வரும் நாள்களில் சவூதி அரேபியாவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என அமெரிக்க சட்டமியற்றுபவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மார்கோ ரூபியோ, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ் மற்றும் வெள்ளை மாளிகையின் மத்திய கிழக்கு தூதர் ஸ்டீவ் விட்கோஃப் ஆகியோர் சவுதி அரேபியாவுக்கு எதிர்வரும் நாள்களில் பயணம் மேற்கொள்வார்கள் என்று அமெரிக்க பிரதிநிதி மைக்கேல் மெக்கால் ரொய்ட்டர்ஸ் சேவையிடம் உறுதிபடுத்தியுள்ளார்.

எனினும், அவர்கள் ரஷ்யாவிலிருந்து யாரை சந்திப்பார்கள் என்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

எவ்வாறெனினும், கடந்த வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸை சந்தித்த உக்ரேன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, சவுதி அரேபியாவில் பேச்சுவார்த்தைக்கு உக்ரேன் அழைக்கப்படவில்லை என்றும், மூலோபாய பங்காளிகளுடன் கலந்தாலோசிப்பதற்கு முன்பு ரஷ்யாவுடன் கிய்வ் பேச்சுவார்த்தையில் ஈடுபடாது என்றும் கூறினார்.

கடந்த ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற ட்ரம்ப், உக்ரேன் போரை விரைவில் முடிவுக்கு கொண்டுவருவதாக பலமுறை சபதம் செய்தார். அவர் புடின் மற்றும் ஜெலென்ஸ்கிக்கு கடந்த புதன்கிழமை தனித்தனியாக தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு உரையாடினார்.

இதனிடையே தற்சமயம் ரஷ்யா உக்ரைனின் ஐந்தில் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்துகிறது, மேலும் பல மாதங்களாக கிழக்கில் மெதுவாக முன்னேறி வருகிறது.

அதே நேரத்தில் உக்ரைனின் சிறிய இராணுவம் மனிதவள பற்றாக்குறையுடன் போராடுகிறது, மேலும் மேற்கு ரஷ்யாவில் ஒரு பகுதியை வைத்திருக்க முயற்சிக்கிறது.

இந்த நிலையில், எந்தவொரு சமாதான ஒப்பந்தத்தின் கீழும் உக்ரேனின் பிரதேசத்தை விட்டுக் கொடுக்கவும் நிரந்தரமாக நடுநிலை வகிக்கவும் ரஷ்யா கோரியுள்ளது.

கைப்பற்றப்பட்ட நிலத்தில் இருந்து ரஷ்யா வெளியேற வேண்டும் என்று உக்ரைன் கோருகிறது, மேலும் மாஸ்கோவின் தாக்குதலைத் தடுக்க நேட்டோ உறுப்பினர் அல்லது அதற்கு சமமான பாதுகாப்பு உத்தரவாதத்தை விரும்புகிறது.

போர் தொடங்கியதில் இருந்து அமெரிக்காவும் ஐரோப்பாவும் உக்ரைனுக்கு பல பில்லியன் டொலர்களை இராணுவ உதவியாக வழங்கியுள்ளன.

# அவுஸ்திரேலியாவில் கத்திக் குத்து தாக்குதல்



தெற்கு அவுஸ்திரேலியாவில் நேற்று சனிக் கிழமையன்று ஒரு சிறிய புகலிடக் கோரிக்கையாளர் மேற்கொண்ட கத்திக் குத்துத் தாக்குதலில் 14 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பத்தில் குறைந்தது நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

பாதிக்கப்பட்டவர்களில் இருவர் பலத்த காயம் அடைந்தனர், மற்ற இருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாக வில்லாச் நகரில் உள்ள பொலிஸார் அந்நாட்டின் தேசிய செய்தித்தாளான க்ளீன் ஜெய்டுங்கிடம் உறுதிபடுத்தியுள்ளனர்.

அந் நாட்டு நேரப்படி நேற்று மாலை 4 மணியளவில் நடந்த இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து 23 வயதுடைய சிரிய இளைஞனை பொலிஸார் விரைவாகக் கைது செய்தனர்.

இந்த நகரம் இத்தாலியுடனான அவுஸ்திரேலியாவின் எல்லையிலிருந்து 20 மைல் தொலைவிலும், ஸ்லோவேனியாவுடனான அதன் எல்லையிலிருந்து 15 மைல்களுக்கும் குறைவான தொலைவிலும் உள்ளது.

வில்லாச் சுமார் 62,000 மக்களைக் கொண்டுள்ளது, இது நாட்டின் ஏழாவது பெரிய நகரமாக உள்ளது.

சனிக்கிழமையன்று நடந்த தாக்குதல் தற்செயலானதாகத் தோன்றியது என்பு பொலிஸார் கூறியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கும் தாக்கியவருக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அவர்களில் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 16/02/2025

## ஹமில்டனில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி

ஹமில்டனில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்த விபத்தில் 31 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

02▶





# டொரொன்டோவில் கடும் பனிப்பொழிவு

**கனடாவின் டொரன்டோவில் கடும் பனிப்பொழிவு நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவான மிக மோசமான பனிப்பொழிவு தற்போது நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.**

அநேக பகுதிகளில் குறிப்பாக டொரன்டோ பெரும்பாகத்தில் கடுமையான பனிப்பொழிவு நிலை ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் 25 சென்டி மீற்றருக்கு மேல் பனிப்பொழிவு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் போக்குவரத்திற்கும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் பின்னர் டொரன்டோவில் பதிவான அதிகூடிய பனிப்பொழிவு தற்போது பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அனேகமான பகுதிகளின் பாடசாலைகள் பனிப்பொழிவு காரணமாக மூடப்பட்டுள்ளன. பொது போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதைவேளை, சீரற்ற கால நிலை காரணமாக பல்வேறு இடங்களில் வாகன விபத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன.





# டொரொன்டோவின் சில முக்கிய சுற்றுலாத் தளங்களுக்கு பூட்டு

டொரொன்டோவின் சில முக்கிய சுற்றுலா தளங்கள் மூடப்பட்டுள்ளன  என அறிவிக்கப்பட்டள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக இவ்வாறு இன்றைய தினம் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டொரொன்டோ உயிரியல் பூங்கா இன்றைய தினம் சீரற்ற வானிலை காரணமாக மூடப்படும் என அறிவித்துள்ளது.

விலங்குகள், ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் விருந்தினர்களின் பாதுகாப்பிற்காக இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்கிறோம், என உயிரியல் பூங்கா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், ராயல் ஒன்டாரியோ மியூசியம் இன்றையதினம் சீரற்ற வானிலை காரணமாக மூடப்படும் என அறிவித்துள்ளது.

ஏற்கனவே நுழைவுச்சீட்டு கொள்வனவ செய்தவர்களுக்கு மீள அளிக்கப்படும் எனவும் ஐந்து நாட்களில் இந்தப் பணம் அவர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



ஆர்ட் கேலரி ஒன்டாரியோ மற்றும் அகா கான் மியூசியம்  ஆகியவை பனிப்புயல் புயல் காரணமாக இன்று திறக்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு சுற்றுலா இடங்களும் நாளைய தினம் மீண்டும் திறக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.





# சீரற்ற காலநிலையால் டொரொன்டோ விமான நிலையப் பயணிகள் பாதிப்பு

டொரொன்டோவில் நிலவி வரும் சீரற்ற கால நிலை காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பியர்சன் விமான நிலையத்தின் பயணிகள் இவ்வாறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விமான நிலையத்தில் பணியாளர்களுக்கு நிலவும் பற்றாக் குறை காரணமாக இந்த அசௌகரிய நிலை மேலும் அதிகரித்து உள்ளது.

காலநிலை காரணமாக பணி யாளர்களின் வருகை குறை வடைந்துள்ளதாகவும் இதனால் விமான நிலையத்தின் தொழிற்பாடுகளை மேற்கொள்வதில் சவால்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சில பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்க நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பயணிகள் அதிக அளவு நேரம் காத்திருந்து விமான பயணங்களை மேற்கொள்ள நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலை காரணமாக விமான பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்தில் பொழியும் பனிப் படலத்தை அகற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக விமான ஓடுபாதைகளை பனி படலத்திலிருந்து மீட்பதற்கு விசேட முனைப்புகள் முன்னெடுக்கப்பட்டன என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





## ஹமில்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹமில்டனில் ஹோக்வில் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

வாகனமொன்று மின் கம்பத்தில் மோதியதனால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





# வெள்ளை மாளிகை அதிகாரிகளை சந்தித்தனர் கனேடிய பிரீமியர்கள்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கனடா மீது 25 சதவிகித கூடுதல் வரிகள் விதிப்பது மற்றும் கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாண மாக ஆக்குவது குறித்து அறிக்கை விடுத்துக்கொண்டே இருக்கிறார்.

இந்நிலையில், புதன்கிழமையன்று, கனடாவின் 13 மாகாண பிரீமியர்களும் வெள்ளை மாளிகை அதிகாரிகளை சந் தித்து இந்த விடயம் குறித்த தங்கள் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், இந்த சந்திப்பு குறித்த முரண்பட்ட தகவல்களை இருதரப்பினரும் வெளியிட்டுள்ளனர்.

அதாவது, கனடா தரப்பில் வெள்ளை மாளிகை அதிகாரிகளை சந்தித்தவர்களில் ஒருவரான பிரிட் டிஷ் கொலம்பியாவின் பிரீமியரான டேவிட் எபி, கனடாவை அமெரிக்காவு டன் இணைப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறிவரும் கருத் துக்கள் குறித்து தாங்கள் கவலை தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகமான எக்ஸில் அவர் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில், கனடாவை அமெரிக்காவுடன் இணைப் பது குறித்த ட்ரம்பின் கருத்து குறித்து வெளிப்படையாக தாங்கள் பேசியதா கவும், அது நடக்காது என்பதை தாங்கள் அடிக்கோடிட்டுக் காட்டியதா கவும் டேவிட் எபி தெரிவித்துள்ளார்.

ஆனால், கனேடிய பிரீமியர்களை சந்தித்த வெள்ளை மாளிகை அதிகா ரிகளில் ஒருவரான ஜேம்ஸ் பிளேர் என்பவரோ, கனடா அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக ஆகாது என் பதை தான் ஒப்புக்கொள்ளவே இல்லை என்று கூறியுள்ளார்.

பிரீமியர் டேவிட் எபியின் கருத்துக் களை ட்ரம்புடன் பகிர்ந்துகொள்வதாக மட்டுமே நாங்கள் தெரிவித்தோம் என்றும் ஜேம்ஸ் பிளேர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஆக, கனடாவில் 13 பிரீமியர்கள் சென்று வெள்ளை மாளிகை அதிகாரி களை சந்தித்தும், அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்றே தோன்றுகிறது.





# கனடாவில் பெண்ணை தாக்கி வாகனத்தை கொள்ளையிட்டவர்களை தேடும் பொலிஸார்

கனடாவில் பெண் ஒருவரை தாக்கி கார் கொள்ளையில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் தேடி வரு கின்றனர்.

பிரம்டன் பகுதியில் பெண் ஒருவர் பயணம் செய்த வாகனத்தை கொள் ளையிட்டு சென்றுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன் றிற்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆயுத முனையில் இந்த பெண் அச்சுறுத்தப்பட்டு, தாக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

பேர்சிடிஸ் பென்ஸ் ரக வாகனமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொள்ளை சம்பவத்தின் போது மேற்படி பெண் சிறு காயங்க ளுக்கு உள்ளாகியுள்ளார் என தெரி விக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் வழங் குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.